முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.119/2010

வா.சா.1 நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் எங்களுடைய இடம் எங்களுக்கு வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளோம். பாத்திய அனுபவத்தில் உள்ள சொத்து என்பதால் பாத்தியம் விளம்புகை செய்திட வேண்டும் என்று பிராதில் கேட்டுள்ளோம் என்றால் நாங்கள் கிரையம் வாங்கி அனுபவித்து வரும் சொத்து. கிரைய பாத்தியம் மூலம் பாத்தியப்பட்டது என்று பிராது பரிகாரத்தில் சொல்லவில்லை என்றால் அந்த பத்தியில் சொல்லவில்லை. பிரதிவாதி கிரையம் வாங்கிய 09.04.2008 தேதியுடைய ஆவண எண்.1720/2008 ஆவணத்தில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரி. பத்திரத்தில் தரப்பினர் இல்லை என்கிற காரணத்தினால் அந்த பத்திரம் செல்லாது என்று கேட்க சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்த பிராதில் மேற்படி ஆவணம் மோசடி என்று சொல்லியுள்ளதற்கு என்ன வகையில் மோசடி என்று விளக்கம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பத்திரத்தில் பொன்னையா ஆசாரி பைமாஸ் எண்.781ஐ கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரி. வா.சா.ஆ.2ல் பி செட்டியூல் இலக்கம் 5ஆக ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டதும் பைமாஸ் எண்.781ஐ கொண்ட சொத்துதான் என்றால் சரி. என் தகப்பனார் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.3ல்லும் பைமாஸ் எண்.781தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.3ன் அசல் தாக்கல் செய்யாமல் சார்பதிவக நகல் தாக்கல் செய்துள்ளதற்கு குறிப்பிட்ட காரணம் உண்டா என்றால் என் அப்பா தாக்கல் செய்தது நான் தொடர்ந்து நடத்துகிறேன் குறிப்பிட்ட காரணம் ஏதும் தெரியவில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பைமாஸ் எண்ணுக்குரிய சரியான சர்வே எண் என்ன என்பது குறித்த ஆவணங்களை நான் சரிபார்த்தேனா என்றால் இல்லை. பைமாஸ் எண்.781 க்குரிய சரியான சர்வே எண் 225 என்றால் சரியல்ல 227/9 பின்னர் அது 227/9பி என்றும் உள்ளது. என் அப்பா கிரையம் வாங்கும் போது தவறுதலாக சர்வே எண்.227/9 மற்றும் 9பி என்று கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் அது சரியல்ல. பைமாஸ் எண்.781க்கு சரியான சர்வே எண்.227/9 என்று காட்ட வருவாய் துறையில் இருந்து ஆவணம் பெற்று தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அது தெரியாது. என் அப்பா கிரையம் வாங்கியது எத்தனை செண்ட் என்றால் பத்திரத்தில் உள்ளது நான் பார்க்கவில்லை. எத்தனை ஏக்கருக்கு வழக்கு போட்டுள்ளோம் என்பது தெரியாது என்றால் எனக்கு சர்வேஎண் பதிந்த தேதிதான் தெரியும். தாவா சொத்தை நேரில் பார்த்து இருக்கிறேன். தாவா சொத்திற்கு நான்கு புறமும் உள்ள நான்குமால் விவரம் தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். முன்பு குறுக்கு விசாரணையில் சொன்னேன். தற்போது ஞாபகம் இல்லை என்கிறார் சாட்சி. என் தகப்பனார் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் கண்டுள்ள நான்குமாலுக்குள் அடங்கிய சொத்து சர்வே எண்.227/9 புதிய சர்வே எண்.227/9பில் இல்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலேயே பைமாஸ் எண்ணுக்குரிய சர்வே எண் சரியல்ல என்றும் நான்குமால் தவறு என்றும் சொல்லியுள்ள

நிலையில் நீதிமன்ற ஆணையரை நியமணம் செய்து சொத்தை வரையறை செய்து காட்டிட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை காட்டசொன்னால் காட்டுவேன். முன்பு இரயத்துவாரி புஞ்சையாக இருந்த தாவா சொத்து தற்போது டவுண் சர்வேயாக மாறிவிட்டது என்றால் சர்வே எண்.227/9 புதிய சர்வே எண்.227/9பி என்பது தான் தெரியும் என்கிறார் சாட்சி. தற்போது டவுண் சர்வே எண்.2/9எ மற்றும் பிஆக உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. ராமசாமி பாலசுந்தரத்திற்கு கிரையம் கொடுத்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ராமசாமி பாலசுந்தரத்திற்கு எந்த சொத்தை கிரையம் கொடுத்தார் என்கிற விவரம் தெரியாது என்றால் சரி. 1995ல் என் தகப்பனார் கிரையம் வாங்கிய தாவா சொத்தில் என் தகப்பனார் பெயருக்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது. சர்வே எண்.227/9க்கு பட்டா ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் தகப்பனார் தாக்கல் செய்துள்ளதில் உள்ளது ஆனால் பட்டாவை கொடுத்திருக்கிறாரா என்பது தெரியவில்லை. வா.சா.ஆ.5ன்படி டவுண் சர்வே எண்.2/9பி என் தகப்பனார் பெயரில் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.4 என் தகப்பனார் பெயரில் டவுண் சர்வே எண்.2/9பிக்கான பட்டா தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரி. டவுண் சர்வே எண்.2/9எ யார் பெயரில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரி. என் தகப்பனார் கிரையம் வாங்கிய பத்திரத்தில் டவுண் சர்வே எண்.2/9எ, 9பி இல்லை என்றால் சாட்சி 9பி தான் சரி என்கிறார். டவுண் சர்வே எண்.2/9பி எங்களுக்க பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் அது 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கி அனுபவித்து வரும் சொத்து என்றாலும் சரியல்ல. பிராதில் கண்டுள்ள நான்குமாலுக்குள் அடங்கிய சொத்து டவுண்சர்வே எண்.2/9பி இல்லை என்றால் சரியல்ல. பைமாஸ் எண்.781க்குரிய சொத்து தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல. பிராது பரிகாரங்கள் ஏதும் கிடைக்க கூடியது இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.